திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் இராய கோபுரம் பற்றிய வரலாற்றை அமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அந்த இராயகோபுரத்தின் அடித்தளம் கிருஷ்ணதேவராயரால் ஆரம்பிக்கப்பட்டது; அதை அவர் முடிக்கவில்லை என்று சொன்னார்கள். அது உண்மைதான். அதே நேரத்திலே, ஸ்ரீரங்கம் இராய கோபுரத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டது போல், மதுரையிலே கிருஷ்ணதேவராயர் ஒரு இராயகோபுர அடித்தளத்தை அமைத்தார். ஸ்ரீரங்கம் இராயகோபுரம் போல் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மதுரைக்குப் போய் விடுவீர்கள், இந்த கோவிலுக்கு வர மாட்டீர்கள் என்று தெரிந்துதான் நான் முதலிலேயே கேட்டேன். அடுத்த கேள்வி.

காஞ்சி மாநகரில் சுற்றுலாத்துறை அலுவலகம் மற்றும் தங்கும் விடுதி கட்டும் இடம்.

* வினா எண். 569—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சி மாநகரில் சுற்றுலாத்துறை அலுவலகம், சுற்றுலா தங்கும் விடுதி ஆகியவைகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) காஞ்சி மாநகரில் சுற்றுலாத் துறை அலுவலகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. அங்கு ஹோட்டல் (சுற்றுலா மாளிகை) ஒன்றினை கட்ட தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிகழகத்தின் இயக்குநர் குழு காஞ்சி மாநகரில் ரூ. 10 லட்சம் செலவில் 1980–81 ஆம் நிதியாண்டில் ஒரு (ஹோட்டல்) சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது குறித்துவிரிவான கருத்துக்கள் அக்கழகத்தின் பொறியியல் பிரிவினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காஞ்சி மாநகரம் வரலாற்று சிறப்புமிக்க பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த ஊர், ஆகவே, இந்த ஊருக்கு வருகின்ற சுற்றுலாப் பிரயாணிகளுக்கு ஒவ்வொரு கோவிலாகச் சென்று விளக்கம்கொடுக்க வழிகாட்டி சர்வீசை ஆரம்பிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அந்தப் பேருந்துகளிலேயே பழக்கப்பட்ட, பயிற்சிபெற்ற வழிகாட்டிகள் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அங்கே செல்லும் பயணிகளுக்கு அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே வேறு யாரையாவது ஏற்பாடு செய்தால், ஒழுங்காக கொண்டுபோய் சரியான கதைகளைச் சொல்வதற்குப் பதிலாக, அவர்களே உருவாக்குகின்ற கற்பனைக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதிலே சங்கடம் வந்துவிடும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா விடுதி அமைக்கிற நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எப்போது அது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் பதிலில் தெரிவித்து இருக்கிறேன். 1980–81 நிதி ஆண்டிலேயே அதற்கான அனுமதி சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொறியியல் நிபுணர்களின் கருத்துக்களை கழகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அவை கிடைத்தவுடன் கழகம் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று கருதுகிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா தங்கும் விடுதி அமைப்பதற்கு, சுற்றுலாத் துறை அலுவலகம் அமைப்பதற்கு அரசினுடைய சார்பிலே என்னென்ன விதிகள் கடைபிடிக்கப்படுகின்றன? சில இடங்களில் அதை அமைக்கிறபோது அது வரலாற்று சிறப்புமிக்க நகராக இருக்கிற காரணத்தாலா? அல்லது வியாபாரத்தின் முக்கியத்துவம் கருதி அந்த அடிப்படையில் இருக்கிற காரணத்தாலா? அல்லது என்னென்ன விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி சுற்றுலாத்துறை அலுவலகம் அமைக்கின்ற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கடுத்து கேட்ட துணைக்கேள்வியின் மூலம், சுற்றுலா வழிகாட்டுகிறவர்கள் நியமிக்க இருக்கிறீர்களா என்று கேட்டதின் மூலம், இப்படிப்பட்ட ஒரு துறை அலுவலகத்தை அமைத்தால், அதன்மூலம் இந்த பணிகள் நடைபெறும் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடிந்தது. ஆகவே சுற்றுலாத்துறைக்கு

[1981 மார்ச் 31

அலுவலகம் என்பது அரசின் துறையாக சில இடங்களில் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தன்னுடைய உணவு விடுதிகளை அல்லது ஓய்வு கூடங்களை அமைக்கின்ற அந்த அடிப்படை, அந்த பகுதி சுற்றுலா பயணிகள் வருகிற எண்ணிக்கையை ஒட்டியும், அந்த பகுதி சுற்றுலா முக்கியத்துவத்திலே எந்த அளவு இடம் பெற்றிருக்கிறது என்பதையும் பார்த்து இப்படிப்பட்ட சுற்றுலா விடுதிகள் கட்டப்படுகிறது; அதனுடைய வரவு செலவுத் திட்டத்திலே ஆண்டு இறுதியிலே கையை கடிக்காமல் இருக்குமா என்பதையும் மனதிலே வைத்துதான் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா விடுதிகளை, உணவு விடுதிகளை அமைத்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிமாநகரதில் ஆயிரக்கணக்கான கோவில்கள் இருப்பதாக சொல்கின்றார்கள். அங்கு தான் அண்ணா அவர்கள் தோன்றினார்கள். அண்ணா அவர்களின் கொள்கையான ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையை விளக்குகிற அளவில் அங்கு ஒலி—ஒளி காட்சி அமைக்க.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் உறுப்பினர் காஞ்சிபுரத்திற்கு போய் வாருங்கள். ஆயிரக்கணக்கான கோவில்கள் என்று ஆரம்பித்தால் என்ன செய்வது ?

கும்பகோணம் அரசு மருத்துவமனை.

*வினா எண் 570—திரு. செ. இராமலிங்கம் : திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் அரசு மருத்துவமனையில் நாய்கடி மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் தட்டுப்பாடு நீங்க மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) மே—ஜூலை 1980-ல் சுமார் 2 மாதம் தட்டுப்பாடு ஏற்பட்டது உண்மை ;

(ஆ) நாய்க்கடி மருந்தை குன்னூரிலே உள்ள பாஸ்டர் நிறுவனம் விநியோகித்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி இந்த நிறுவனத்திற்கு கடிதம் எழுதியும், தந்தி கொடுத்தும் அவர்கள் மருந்தை சப்ளை செய்ய